DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 22/2017 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |

| | |
|---|---|
| Name | முத்துராமலிங்கம் |
| Father / Husband Name | காமாட்சி |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 19th July 2022.

---

முதல் விசாரணை:-

நான் கீழவளையம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் ஓட்டுநராக வேலை செய்து வருகின்றேன். எதிரி பழனி எனது சித்தப்பா. ஆறுமுகம் எனது சித்தப்பாவின் மனைவி. அ.சா. 1 எனது அம்மா. சம்பவத்தில் காயம்பட்டவர் எனது அப்பா. எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் ஏற்கனவே சொத்து பிரச்சனை உள்ளது. 29.12.2014ம் தேதி காலை 9.00 மணியளவில் சைக்களில் எனது அப்பா காளையார்கோவில் சந்தைக்கு செல்வதற்காக சிவகண்மாய் வழியாக சென்ற போது எதிரிகள் இருவரும் என் அப்பாவை வழிமறித்து கம்பால் அடித்து காயம் ஏற்படுத்திவிட்டார்கள். இனிமேல் சொத்துப்பக்கம் வந்தாய் என்றால் உன் சாவு என் கையில் தான். சொத்து பக்கமே வரக்கூடாது என்று கொலை மிரட்டல்விடுத்துள்ளனர். ஊர்க்காரர்கள் தகவல் சொன்னதின் பேரில் நானும், அ.சா. 1ம், ஊர்க்காரர்கள் சென்று பார்த்தோம். சென்று பார்த்த போது என் அப்பாவிற்கு மண்டை உடைந்து இரத்தம் வந்தது. வலது மணிக்கட்டில் உடைந்து காயம் ஏற்பட்டிருந்தது. காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது. என்ன நடந்தது என்று அப்பாவிடம் கேட்டதற்கு எதிரிகள் இருவரும் அடித்து காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக சொன்னார். 108

ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். என் அப்பா மருத்துவமனையில் வைத்து புகார் கொடுத்தார் . போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

போலிசார் என்னை எந்த தேதியில் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் காலை 9.00 மணிக்கு சம்பவம் நடந்தது 10 மணிக்கெல்லாம் மருத்துவமனை சென்றுவிட்டோம் அங்கு விசாரித்தார்கள். என் அப்பாவிற்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்க நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எங்களுக்குள் சொத்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். எதிரிகள் என் அப்பா மீது வழக்கு கொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் இரண்டு குடும்பத்திற்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்பட்டு மாறிமாறி காவல் நிலையத்தில் புகார் கொடுப்போம் என்றால் சரிதான். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா அன்னதானத்தில் சென்று சாப்பிடுவார் என்றால் சரிதான். என் அப்பா காலை 8.00 மணிக்கு சென்று விட்டு மாலை 7.00 மணிக்கு தான் வீடு வருவார் என்றும் அதுவரை காளையார்கோவிலில் தான் இருப்பார் என்றால் சரிதான். எதிரிகளால் என் அப்பாவிற்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என் அப்பா மீது பழனி கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக இந்த பொய் வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கு பசி மயக்கத்தால் சைக்கிளில் இருந்து கீழே விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 19.07.2022**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.